Y-m-Cn

Registered as a News Paper    பக்கங்கள் 04    விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM    Peoples Daily    மக்கள் தினசரி

நாதம் 04 | திருவள்ளுவர் ஆண்டு 2024 | வைகாசி 27 | [09-06-93] | புதன்கிழமை | ஓசை 111

## பதிவு வைத்திய அதிகாரிகளின் சம்பள முரண்பாடு நீக்கம்

பதிவு வைத்திய அதிகாரிகள் மற்றும் உதவி வைத்திய அதிகாரிகளின் முரண்பாடாக இருந்து வந்த சம்பள உயர்வுகள், அலவன்ஸ்கள், கொடுப்பனவுகள் அனைத்தும் நிவர்த்தி செய்யப்பட்டுள்ளதாக பதிவு உதவி வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் பிரதிப் பொருளாளரும், வட-கிழக்கு மாகாணப் பிரதிநிதியுமான டாக்டர் கே. தியாகராஜா தெரிவித்தார். இதற்கான முடிவுகளைக் கடந்த வாரம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டம் அங்கீகரித்தது எனவும் அவர் தெரிவித்தார். இதன்படி 1-1-88 தொடக்கம் கிடைக்கவேண்டிய சம்பள உயர்வுகளும், ஒய்வூதியமற்ற அலவன்ஸ் கொடுப்பனவுகளும் பதிவு உதவி வைத்திய அதிகாரிகள் சங்க உறுப்பினர்களுக்கு கிடைக்கவுள்ளன. இதன்படி தற்போது கிடைக்கும் சம்பளத்தில் ரூபா 1500 வரையில் பதிவு உதவி வைத்திய அதிகாரிகள், பல் வைத்திய அதிகாரிகள், தாதி உத்தியோகத்தர்கள், (4ஆம் பக்கம் பார்க்க)

# பூநகரியில் கடைப்பிடிக்கும் ஒழுங்குமுறை: ஐ. நா. அதிகாரியுடன் புலிகள் பேச்சு

### அங்கிலிக்கன் ஆயர் பெர்னாண்டோ

## சமாதான முயற்சியில் தொடர்ந்தும் ஈடுபாடு

[கொழும்பு]

வடக்கு, கிழக்கில் நடைபெற்று வரும் யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவரும்முகமாக ஒருசமாதான சூழ்நிலையை உருவாக்கும் முயற்சியில் அங்கிலிக்கன் ஆயர் வணக்கத்துக்குரிய கென்னத் பெர்னாண்டோ தொடர்ந்தும் ஈடுபட்டுவருவதாக கொழும்பில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த முயற்சியின் ஒரு கட்டமாக தென்னிலங்கையில் உள்ள எதிர்க்கட்சி அரசியல் தலைவர்களுடனும் ஆளும் கட்சி அரசியல் தலைவர்களுடனும் அங்கிலிக்கன் ஆயர் தொடர்ச்சியான பேச்சுவார்த்தைகளை நடத்திவருகிறார்.

எதிர்க்கட்சித் தலைவர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா, திருமதி சந்திரிக்கா குமாரணதுங்கா, திருமதி லலித் அத்துலத்முதலி, திரு. காமினிதிசநாயக்கா மற்றும் வாசுதேவநாணயக்காரா உட்பட பல்வேறு எதிரணிக் கட்சித்தலைவர்களையும் ஆளும் கட்சித்தலைவர்களையும் கடந்த இருவாரகாலத்தில் பல தடவைகள் சந்தித்து மேற்படி விடயம் குறித்து பேச்சு வார்த்தை நடாத்தியுள்ளார்.

திரு. வாசுதேவநாணயக்காராவுடன் சுமார் இரண்டரை மணி நேரமாக பேசியதாகவும் இவர் உட்பட பல்வேறு அரசியல் தலைவர்கள் சமாதான சூழ்நிலையை உருவாக்குவதில் ( 4 ஆம் பக்கம் பார்க்க )

## நாளை மீண்டும் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

பூநகரிப்பாதையைத் திறப்பது குறித்த பேச்சுவார்த்தை நேற்று மாலை விடுதலைப் புலிகளுக்கும், அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலய பிரதிநிதிகளுக்கும் இடையில் சுமார் இரண்டு மணிநேரம் இடம்பெற்றது. இப்பேச்சின்போது பூநகரிப் பாதை திறக்கப்படும் பட்சத்தில் இராணுவமும் - விடுதலைப்புலிகளும் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்குமுறை பற்றி ஆராயப்பட்டது.

இதேவேளை, இவ்விடயம் தொடர்பாக நாளையும் விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளும் அகதிகளுக்கான ஐ. நா. உயர்ஸ்தானிகராலய பிரதிநிதிகளும் சந்தித்துப் பேசவுள்ளனர்.

நேற்றுக் காலை கப்பல் மூலம் பருத்தித்துறை துறைமுகம் ஊடாக யாழ். வந்த அகதிகளுக்கான ஐ. நா. உயர் ஸ்தானிகராலய கொழும்பு வதிவிடப் பிரதிநிதி டாக்டர் பீற்றர் நிக்கிலஸ், நேற்று மாலை 5 மணியில் இருந்து 7 மணிவரையிலும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர். இச்சந்திப்பின் போது அ. ஐ. நா. உயர்ஸ்தானிகராலய யாழ். வதிவிடப் பிரதிநிதி அசோக்குமாரும் கூட இருந்தார்.

விடுதலைப் புலிகள் தரப்பில் இப்பேச்சுவார்த்தையின் போது அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் ஆகியோர் பங்குபற்றினர்.

இப்பேச்சுக்களின் போது பூநகரி பாதை போக்குவரத்திற்கு திறக்கப்படும் பட்சத்தில் ராணுவமும் - புலிகளும் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்கு முறைகள் பற்றி விரிவாக ஆராயப்பட்டன.

இதேவேளை இப் பூநகரி பாதை விவகாரம் தொடர்பாக டாக்டர் நிக்கிலஸ் மீண்டும் ஒருமுறை நாளை விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.

## யாழ். வைத்தியசாலைக்கு

## மருத்துவ உபகரணங்கள் விரைவில் கிடைக்கும்

### பிரிட்டிஷ் தூதரக அதிகாரி தெரிவிப்பு

## சமாதானம், நல்லுறவே தூதுக்குழுவின் நோக்கமாம்

(நெல்லியடி)

''உண்மையான கருத்தொருமைப் பாட்டுக்கு சமய நிறுவனப் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை செய்யும் நோக்குடனும், இலங்கையிலுள்ள பல்வேறு ஆத்மீகத் தலைவர்களு... எமது நெல்லியடி செய்தியாளருக்கு வழங்கிய செய்திக் குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை இறங்குதுறைக்கு வருகை தந்த நல்லெண்ண தூதுக்குழுவினர் ... சர்வதேச சர்வமத உறுப்பினர்களின் வேண்டுகோளுக்கு இணங்கவே விஜயம் மேற்கொண்டதாகவும் நம்பிக்கை, தியாகம், சுதந்திரம், நேர்மை ஆகியவற்றை ஏற்படுத்துவதற்கான மனித உரிமையை மரி...

## பெண் ...

தான சூழ்நிலையை உருவாக்கும் முயற்சியில் அங்கிலிக்கன் ஆயர் வணக்கத்துக்குரிய கென்னத் பெர்னாண்டோ தொடர்ந்தும் ஈடுபட்டுவருவதாக கொழும்பில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த முயற்சியின் ஒரு கட்டனும் அங்கிலிக்கன் ஆயர் தொடர்ச்சியான பேச்சுவார்த்தைகளை நடத்திவருகிறார்.

எதிர்க்கட்சித் தலைவர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா, திருமதி சந்திரிக்கா குமாரணதுங்கா, திருமதி லலித் அத்துலத்முதலி, திரு. காமினிதிசநாயக்கா மற்றும் ந்த இருவார காலத்தில் பல தடவைகள் சந்தித்து மேற்படி விடயம் குறித்து பேச்சு வார்த்தை நடாத்தியுள்ளார்.

திரு. வாசுதேவநாணயக்காராவுடன் சுமார் இரண்டரை மணி நேரமாக பேசியதாகவும் இவர் உட்பட பல்வேறு அரசியல் தலைவர்கள் சமாதான சூழ்நிலையை உருவாக்குவதில்

( 4 ஆம் பக்கம் பார்க்க )

நேற்றுக் காலை கப்பல் மூலம் பருத்தித்துறை துறைமுகம் ஊடாக யாழ். வந்த அகதிகளுக்கான ஐ. நா. உயர் ஸ்தானிகராலய கொழும்பு வதிவிடப் பிரதிநிதி டாக்டர் பீற்றர் நிக்கிலஸ், நேற்று மாலை 5 மணியில் இருந்து 7 மணிவரையிலும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர். இச்சந்திப்பின் போது அ. ஐ. நா. உயர்ஸ்தானிகராலய யாழ். வதிவிடப் பிரதிநிதி அசோக்குமாரும் கூட இருந்தார்.

விடுதலைப் புலிகள் தரப்பில் இப்பேச்சுவார்த்தையின் போது அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் ஆகியோர் பங்குபற்றினர்.

இப்பேச்சுக்களின் போது பூநகரி பாதை போக்குவரத்திற்கு திறக்கப்படும் பட்சத்தில் ராணுவமும் - புலிகளும் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்கு முறைகள் பற்றி விரிவாக ஆராயப்பட்டன.

இதேவேளை இப் பூநகரி பாதை விவகாரம் தொடர்பாக டாக்டர் நிக்கிலஸ் மீண்டும் ஒருமுறை நாளை விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.

---

**யாழ். வைத்தியசாலைக்கு**

# மருத்துவ உபகரணங்கள் விரைவில் கிடைக்கும்

## பிரிட்டிஷ் தூதரக அதிகாரி தெரிவிப்பு

[கொழும்பு]

யாழ்ப்பாணம் வைத்தியசாலைக்கென பிரிட்டிஷ் அரசினால் நன்கொடையாக வழங்கப்பட்ட மருத்துவ பொருள்கள் விரைவில் வடக்கிற்கு அனுப்பிவைக்கப்படும் என கொழும்பிலுள்ள பிரிட்டிஷ் தூதரக அதிகாரிகள் பி. பி. ஸிக்கு தெரிவித்துள்ளனர். இதற்கான உறுதிமொழியை சிறிலங்கா அதிகாரிகள் வெளியிட்டதாக பிரிட்டிஷ் தூதரக அதிகாரிகள் தெரிவித்தனர்.

நான்கு மாதங்களுக்கு முன் கொழும்பு வந்த இந்த மருத்துவ உபகரணங்களை வட பகுதிக்கு அனுப்ப கூட்டுப் படைத் தலைமையகம் மறுத்ததால் இவை கொழும்பில் களஞ்சியம் ஒன்றில் தேங்கிக் கிடப்பது குறிப்பிடத்தக்கது.

## சர்வதேச நாணய நிதியம் மேலும் நிபந்தனை விதிப்பு

### பொருள்கள் விலை அதிகரிக்கும்?

சர்வதேச நாணய நிதியம் சிறிலங்கா அரசுக்கு விதித்த நிபந்தனைகளை ஏற்றதையடுத்து டீசல், மா மற்றும் சில பொருள்களின் விலைகள் அதிகரிக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சிறிலங்காவிற்கு வழங்க வேண்டியமூன்றாவது தவணை பணத்தை வழங்க முன் நாட்டின் நிலைமையை அறியவந்த சர்வதேச நாணய நிதியத்தின் அதிகாரிகள் குழு தமது பேச்சுகளை முடித்துக்கொண்டு திரும்பி விட்டனர். சிறிலங்காவின் துண்டுவிழும் தொகையான 100 மில்லியன் டொலர் தொகையைக் குறைக்க நடவடிக்கை எடுக்குமாறு சர்வதேச நாணயநிதியம் சிறிலங்கா அரசைக் கேட்டுள்ளது. இப்படிச் செய்தாலே தாம் உதவியளிப்பதாக உறுதி வழங்கிய மூன்றாம் தவணை நிதியுதவியை வழங்க முடியும் என ஐ. எம். எப் நிபந்தனை விதித்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஐ. எம்.எப் இன் இந்த நிபந்தனையை நிறைவேற்றும் முகமாக சிறிலங்கா அரசு சில பொருள்களின் விலைகளை அதிகரிக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது

## கலிபர் தாக்குதல்

காரைநகர் ஊர்காவற்றுறை பகுதிகளில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் தமது முன்னணி நிலைகளிலிருந்து நேற்றுஇரவு எறிகணைத் தாக்குதல்களையும், கலிபர் தாக்குதல்களையும் மேற்கொண்டனர்.

**அம்பனைப் பகுதியில்**

# இராணுவ வாகனம் மீது புலிகள் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

வலி-வடக்கில் இராணுவ வாகனம் ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் பதுங்கியிருந்து தாக்குதல் நடத்தியுள்ளனர்.

நேற்று முன்தினம் காலை 5.00 மணியளவில் தெல்லிப்பழையில் உள்ள அம்பனைப் பகுதியிலேயே மேற்படி தாக்குதல் நடாத்தப்பட்டது. மேற்படி பகுதியில் இராணுவத்தினர் வாகனத்தில் சென்றுகொண்டிருந்தபோது அப்பகுதியில் பதுங்கியிருந்த விடுதலைப் புலிகள் திடீர்த் தாக்குதலை நடாத்தினர்.

இத் தாக்குதலின் போது சிறிலங்கா இராணுவத்தினருக்கு ஏற்பட்ட சேதவிபரங்கள் தெரியவரவில்லை புலிகள் தரப்பில் எதுவித சேதங்களும் ஏற்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## 16,700 ஊர்காவல்படை சிறிலங்காபடையில் இணைவு

(திருக்கோணமலை)

சிறிலங்காவின் பல பகுதிகளிலும் 16,700 ஊர்காவல் படையினர் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை திருக்கோணமலை, வவுனியா, அம்பாறை, பொலநறுவை, அனுராதபுரம், சிலாபம் ஆகிய மாவட்டங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட மேலும் 97 ஊர்காவல்படையியினர் ஹொரணை கும்புக்க ஊர்காவல்படை பயிற்சி முகாமில் பயிற்சியை முடித்துக் கொண்டு அண்மையில் வெளியேறியுள்ளனர்.

## பிரேமாவின் ரகசியக் குழு ஆட்கடத்தலில் ஈடுபட்டது

(பேர்லின்)

முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் லோறன்ஸ் தலைமையில் இயங்கிய இரகசியப் புலனாய்வுப் பிரிவு ஜனாதிபதி பிரேமதாசாவின் எதிரிகளைக் கடத்தும் வேலையில்ஈடுபட்டதாக ஜேர்மன் வானொலியின் கொழும்புச் செய்தியாளர் தெரிவிக்கிறார்.

முன்னாள் ஜனாதிபதியினால் உருவாக்கப்பட்ட இந்த இரகசிய புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரிகள் சிறுபான்மையினத்தவரான தமிழர்கள்

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## இன்று முதல் தபால் விநியோகம்

யாழ். மாவட்டத்திற்கென 'குமாரி' கப்பலில் வந்த 700 தபால் பொதிகள் யாழ். பிரதம தபால் திணைக்கள உத்தியோகத்தர்களால் நேற்று கப்பலில் இருந்து இறக்கப்பட்டு பிரதமதபாலகத்திற்கு எடுத்துவரப்பட்டது. இத்தபால்கள் இன்று முதல் விநியோகிக்கப்படும். (யோ)

# சமாதானம், நல்லுறவே தூதுக்குழுவின் நோக்கமாம்

(நெல்லியடி)

''உண்மையான கருத்தொருமைப் பாட்டுக்கு சமய நிறுவனப் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை செய்யும் நோக்குடனும், இலங்கையிலுள்ள பல்வேறு ஆத்மீகத் தலைவர்களுடன் சமாதானத்தையும், நட்புறவையும் வழங்குவதற்குரிய உற்சாகத்தைக் கொடுப்பதற்குமாகவே, இந் நல்லெண்ணத் தூதுக்குழு வடபகுதிக்கு தமது விஜயத்தை மேற்கொண்டுள்ளனர்''

இவ்வாறு நேற்றுக்காலை குமாரி கப்பல் மூலம் பருத்தித்துறைக்கு விஜயம் செய்த நல்லெண்ண தூதுக் குழுவினர் எமது நெல்லியடி செய்தியாளருக்கு வழங்கிய செய்திக் குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை இறங்கு துறைக்கு வருகை தந்த நல்லெண்ண தூதுக்குழுவினர் நேற்றுக்காலை பருத்தித்துறை பங்குத் தந்தையின் வாசல் தலத்தில் நடைபெற்ற தேநீர் உபசரிப்பின்போது எமது செய்தியாளருக்கு வழங்கிய செய்திக் குறிப்பொன்றில் மேலும் தகவல் தருகையில்:- ஆசிய மனித அபிவிருத்தி பங்களிப்பு நிறுவனத்தின் (SEDDC) உதவியுடன் வட பகுதிக்கு வந்துள்ள குழுவினர் சர்வதேச சர்வமத உறுப்பினர்களின் வேண்டுகோளுக்கு இணங்கவே விஜயம் மேற்கொண்டதாகவும் நம்பிக்கை, தியாகம், சுதந்திரம், நேர்மை ஆகியவற்றை ஏற்படுத்துவதற்கான மனித உரிமையை மரியாதை செய்தல் போன்றவற்றிற்கு சம்பந்தப்பட்டவர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்துவதற்காகவும், மக்களின் பங்களிப்புடன், சமாதானத்துடன் பின் செல்லும் பாதையை சமய மதத் தலைவர்களுடன் ஏற்படுத்தும் நல்லெண்ணமாக இவ் விஜயம் மேற்கொள்ளப்பட்டுள்ள

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## பெண் காயம்

[யாழ்ப்பாணம்]

நேற்று அதிகாலை கட்டுவன் பகுதியிலிருந்து இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் படுக்கையில் இருந்த இளம் பெண் ஒருவர் காயமடைந்தார்.

நேற்று அதிகாலை இரண்டு மணியளவில் கட்டுவன் இரா

( 4 ஆம் பக்கம் பார்க்க )

# நல்லெண்ண தூதுக்குழு புலிகளுடன் இன்று பேச்சு

(யாழ்ப்பாணம்)

நேற்றுக்காலை யாழ். விஜயம் செய்துள்ள வெளிநாட்டு நல்லெண்ண தூதுக் குழுவினர் இன்று மாலை விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேச்சுவார்த்தைகளை நடாத்தவுள்ளனர்.

நேற்று முன்தினம் விமானம் மூலம் பலாலி வந்தடைந்த இந் நல்லெண்ண தூதுக்குழுவினர், நேற்றுக்காலை கப்பல் மூலம் பருத்தித்துறை வந்தடைந்தனர்.

விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளுடனான இப் பேச்சுவார்த்தையின்போது வெளிநாட்டு நல்லெண்ண தூதுக் குழுவினருடன் யாழ். ஆயர் அதிவணக்கத்துக்குரிய தோமஸ் சவுந்தரநாயகம், வணக்கத்துக்குரிய எம். ஈ பயஸ், வணக்கத்துக்குரிய எஸ். எச். ஜெபநேசன், வணக்கத்துக்குரிய ஏ.ஜே வி. சந்திரகாந்தன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். இப் பேச்சுக்களின்போது சமாதான சூழலை உருவாக்குவது குறித்துப் பேசப்படும் என தெரிய வருகிறது.

## பல்வேறு தரப்பினருடன் நேற்று தூதுக்குழு பேச்சு

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்துள்ள வெளிநாடுகளின் நல்லெண்ணத் தூதுக் குழுவினர் நேற்று பல்வேறு இடங்களுக்கும் சென்று அங்குள்ள பல தரப்பினரையும் சந்தித்து கலந்துரையாடினர்.

இக்குழுவினர் நேற்றைய தினம் யாழ். பல்கலைக் கழகத்திற்கு விஜயம் செய்து அங்கு பல விரிவுரையாளர்களையும், மாணவர்களையும் சந்தித்து உரையாடினர். தொடர்ந்து யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டனர். இக்கலந்துரையாடல் அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றிய தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது. இதில் யாழ். மாவட்டத்திலுள்ள

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## தொழில் நுட்பக்கல்லூரி வினாத்தாள்கள் வந்தன

(வடமராட்சி)

யாழ். கல்வித் திணைக்களத்திற்கு வினாத்தாள்கள் அடங்கிய பார்சல் ஒன்று நேற்று 'குமாரி' கப்பல்மூலம் எடுத்து வரப்பட்டு கல்வித் திணைக்களத்திற்கு வந்து சேர்ந்தது.

யாழ். தொழில் நுட்பக் கல்லூரியில் நடைபெறவுள்ள பரீட்சை வினாத்தாள்களே எடுத்துவரப்பட்டிருப்பதாக கல்வித்திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (யோ)

## எறிகணை வீச்சு

பலாலி சிறிலங்காஇராணுவ முகாமிலிருந்து நேற்று முன் தினம் இரவு 12 மணியளவில் இராணுவத்தினர் வலிகாமம்

( 4 ஆம் பக்கம் பார்க்க )

# வரி விளம்பரம்

## சந்தணமேடை

சந்தணமேடை சண்முக லிங்கன் கவிதைகள் என். சண்முகலிங்கன். சமூகவியல் சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்ப்பாண பல்கலைக்கழகம். விலை ரூபா 75/- விற்பனையாளர்கள்: பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (சி-6734)

## கொழு பு ஸ்ரூடியோ

நினைவஞ்சலி, சரமகவிக்குத் தேவையான (Blocks) பழைய படங்களில் இருந்து அந்தியேட்டிக்குத் தேவையான புகைப்படங்கள், உறுதியான றபர்சீல் — ஸ்ரிக்கேஸ் தேவைப்படும்போது எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள் கொழும்பு ஸ்ரூடியோ 55. மணிக்கூட்டு வீதி. யாழ்ப்பாணம் (சி-6747)

## கார் கசற் ரேடியோக்களா? கடிகாரங்களா?

மேற்குறிப்பிட்டவை யாதேனும் பழுதடைந்தால் அநுபவம் குறைந்தவர்களிடம் திருத்தக் கொடுத்து. பழுதையும் செலவையும் கூட்டிக் கொள்ளாமல் எம்மிடமே தந்து சிரமமின்றி குறைந்த செலவில் உத்தரவாதத்துடன் திருத்திப் பெற்றுக்கொள்ள எம்மை நாடுங்கள். டில்கா வாச் அன் ரேடியோ வேக்ஸ் 284, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் கிளை: கண்டி வீதி. சாவகச்சேரி. (சி-6784)

## தவறிவிட்டது

06-06-1993 அன்று நீலநிற பி.பி பாக் ஒன்று ஆஸ்பத்திரி வீதி-கஸ்தூரியார் வீதிச்சந்திக்கிடையில தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஈழநாதம காரியாலயத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். [5111]

## வருடாந்த மகோற்சவம்

வண்ணார்பண்ணை காட்டுத்துறை விக்னேஸ்வர பிள்ளையார் கோவில் வருடாந்த மகோற்சவம் நாளை வியாழக்கிழமை முதல் எதிர்வரும் 20-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெறவுள்ளது இவ் விழாவின் போது தினமும் மாலை 7 30மணிமுதல் 8 30 மணிவரை காரைநகர் கம்பன் கழக அமைப்பாளரும், யாழ் இந்துக்கல் லூரி ஆசிரியருமான

# சுதந்திரக் கட்சிக்கு மட்டும் மா. சபையில் 111 இடங்கள்

(கொழும்பு)

சென்ற மாதம் நடைபெற்ற மாகாண சபைத் தேர்தலில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்குக் கிடைத்த ஆசனங்களில் சுதந்திரக் கட்சிக்கு 111 உறுப்பினர்களும் இலங்கை கம்யூனிச கடசிக்கு 9 உறுப்பினர்களும், சமசமாஜக் கட்சிக்கு 8 உறுப்பினர்களும், மக்கள் முன்னணி (வை.பி. அணி) 3 உறுப்பினர்களும், விமுக்தி மக்கள் கட்சி 2 உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகம்

## கேள்வி அறிவித்தல்


1. யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திற்குச் சொந்தமான பெற்றோலில் இயங்கும் மோட்டார் வாகனம் ஒன்றை (இயந்திரத்தின் பரிவலு 16 2) டீசலில் இயங்குவதாக மாற்றுவதற்கு கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.
2. கேள்விதாரர்கள் 10-06-93 11-06 93 ஆகிய இரு தினங்களிலும் வேலை நேரத்தில் வாகனத்தைப் பார்வையிடலாம்.
3. கேள்விப்பத்திரம் பெற விரும்புவோர் மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூபா 150/- யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிதியாளரிடம் செலுத்தி பற்றுச்சீட்டை யாழ்ப்பாண பல்கலைக்கழக வேலைகள் எந்திரவியலாளரிடம் 21-06-93க்கு முன் சமர்ப்பிக்க வேண்டும்.
4. பூரணப்படுத்தப்பட்ட கேள்விப் பத்திரங்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பதிவாளரிடம் 23-06-93 அன்று 10-00 மணிக்குமுன் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்பட வேண்டும்.
5. எந்தக் கேள்விப்பத்திரத்தையும் நிராகரிக்கும் உரிமை யாழ். பல்கலைக்கழக கேள்விச் சபைக்கு உண்டு.

— பதிவாளர்

யாழ் பல்கலைக்கழகம்,
த. பெ. இல. 57,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

(சி-6741)

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



# வலையில் சிக்கிய எஞ்சின்

(வடமராட்சி)

பருத்தித்துறை முனைக் கடற்பரப்பில் வலையில் சிக்குண்டிருந்த என்ஜின் ஒன்று மீனவர்களால் நேற்று கண்டெடுக்கப்பட்டு முனை கடற்தொழிலாளர் சங்க பணிமனையில் வைக்கப்பட்டுள்ளது.

உரியவர்கள் தகுந்த ஆதாரங்களைக் காட்டி பெற்றுக் கொள்ளலாமென முனை கடற்தொழிலாளர் சங்கத் தலைவர் திரு. வ. அருள்தாஸ் தெரிவித்தார். (யோ)

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



வீரப்பிறப்பு:
9. 10. 1971

வீரச்சாவு:
9. 06. 1991

### லெப். கரிகாலன்

(சிதம்பரப்பிள்ளை சுரேஷ்)

இனிமையான...
இளமை நாட்களை சுமக்காமல்...
விடுதலை நோக்கோடு...
நாலைந்து வயதினில்...
களம் பல கண்டவன் - நீ.

''கயவர்களை கருவறுக்கவும்
சுதந்திரக் காற்றை முகருவதற்கும்...
விடியலை தேடிப் புறப்பட்ட
வேங்கை - நீ.''


''உனது இளமை வேகத்தின் மீது - கடல்
அன்னைக்கும் மோகமோ...?
அலைகளிற்குள் உன்னை
அணைத்துவிட்டாலும் .. நீ கொண்ட....
இலட்சியம்...
ஈடேறும் நாள் தூரத்திலில்லை...''

— பெற்றோர்,
சகோதரர்கள்.

வரணி வடக்கு,
வரணி.

[5106]

## நீங்காத நினைவாக ஓராண்டு



# சுன்னாகம் பகுதியில் மரக்கறிகள் திருட்டு

[குருநகர்]

சுன்னாகம், கொத்தியாவத்தை பகுதித் தோட்டங்களில் இரவு வேளைகளில் காய்கறித் திருட்டு நடைபெற்றுவருவதாகப் புகார் செய்யப்பட்டுள்ளது.

செல்வராசா பாலகிருஷ்ணன் [இந்திரன்] என்பவரது தோட்டத்தில் 45 கிலோ கத்தரிக்காய், மற்றும் சுந்தரம்பிள்ளை என்பவரது தோட்டத்தில் 50கிலோ புடலங்காய், நாகேந்திரகுமார் என்பவரது தோட்டத்தில் மேலும் 30 கிலோ புடலங்காய் ஆகியன களவாடப்பட்டிருப்பதாகப் புகார் செய்யப்பட்டிருக்கிறது. [21]

## கண்டெடுப்பு

பூமணி முத்துலிங்கம் 276771752V இலக்கமுள்ள அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு எமது பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் ஆதாரம்காட்டிப் பெற்றுக்கொள்ளவும்.

## நினைவு கூருகின்றோம்... 1993-06-09

1987ஆம் ஆண்டு இதே தினத்தில் பன்னாலையில் சிறிலங்கா இராணுவத்தினரின் எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட 3 தமிழர்கள்.

1988ஆம் ஆண்டு யாழ்-புன்னாலைக்கட்டுவன் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது வீரச்சாவெய்திய.

கலீல் (இரத்தினசிங்கம் கலியுகன் - ஈவினை. புன்னாலைக்கட்டுவன்-யாழ்)

வினோதன் (மார்க்கண்டு பத்மராசா - இராஜேஸ்வரி வீதி, குப்பிளான், ஏழாலை-யாழ்)

1989ஆம் ஆண்டு புங்குடுதீவில் தேசவிரோத சக்திகளினால் சுட்டுக்கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான:
இ. சதாசிவம்.

யாழ். மத்தியூஸ் வீதியில் தேசவிரோத சக்திகளினால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

1991ஆம் ஆண்டு தமிழீழக் கடற்பரப்பில் (பருத்தித்துறை) எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட படகுவிபத்தில் எமைப்பிரிந்த.

லெப். ரவி (சபாபதி தயாபரன்-மட்டுநகர்)

2-ம் லெப். சேமசின் (சதாசிவம் நடராசா-மட்டுநகர்)

லெப். ரமணன் (பாண்டியன் சுந்தரதாஸ்-திருமலை)

லெப். கேணல் டேவிற் (கிறிஸ்தோப்பர் அன்ரனி மரியதாஸ்- பலாவிக்குடியேற்றம் பொலிகண்டி, வல்வெட்டித்துறை-யாழ்)

லெப். கரிகாலன் (சிதம்பரப்பிள்ளை சுரேஷ்-வரணி வடக்கு. கொடிகாமம்-யாழ்)

2-ம் லெப். மாணிக்கம் (சண்முகநாதன் கஜேந்திரன் மூளாய்வீதி. கலட்டி, வட்டுக்கோட்டை-யாழ்)

புலவர் (சிறிஆனந்தகுரு சியாமளன்-கொம்மாந்துறை. உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை-யாழ்)

மட்டுநகரில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கைகளில் கொல்லப்பட்டகளுவங்கேணி 2 ஐச் சேர்ந்த சிறுவன், இளைஞன் ஆகிய 2 தமிழர்கள்

1992ஆம் ஆண்டு திருமலை- மூதூர், அரிப்புச்சந்தியில் சிறிலங்கா இராணுவத்தினர் மீது மேற்கொண்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய,

மேஜர் வெற்றிச்செல்வன்/கெரில்லா (அழகையா கோமேஸ்வரன் - 3ம் குடியிருப்பு. கிளிவெட்டி மூதூர்-திருமலை)

[illegible]
வீதி-கஸ்தூரியார் வீதிச்சந்திக்கிடையில தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஈழநாதம காரியாலயத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். [5111]

## வருடாந்த மகோற்சவம்

வண்ணார்பண்ணை காட்டுத்துறை விக்னேஸ்வர பிள்ளையார் கோவில் வருடாந்த மகோற்சவம் நாளை வியாழக்கிழமை முதல் எதிர்வரும் 20-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெறவுள்ளது இவ்விழாவின் போது தினமும் மாலை 7 30மணிமுதல் 8 30 மணிவரை காரைநகர் கம்பன் கழக அமைப்பாளரும், யாழ் இந்துக்கல்லூரி ஆசிரியருமான த. சிவகுமாரன் சிறப்புரை ஆற்றவுள்ளார்.

## கச்சான் திருடர் அகப்பட்டனர்

நவாலி களையோடை அம்மன் ஆலயப் பகுதியில்தொடர்ச்சியாக கச்சான் திருடி நாசம் விளைவித்த நால்வர் கொண்ட குழு விசாரணைக்காக தமிழீழ காவல் துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

நவாலிபகுதியில் நிலக்கடலை பயிர்ச்செய்கையை யேற்கொண்டு வரும் சம்பர் மூக்கதம்பி என்பவருடைய வயலிலேயே இத் திருட்டுச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

சம்பவ தினத்திலிருந்து தொடர்ச்சியாக ஒன்பது நாட்கள் நள்ளிரவுவேளையில் பயிரிட்ட நிலக்கடலையை திருடிய நாலுபேர் கொண்ட குழு பத்தாம் நாள் திருடிச் செல்லும் வேளையில் அதிகாலை 3மணியளவில் விவசாயத்தரப்பினரால் இனம் காணப்பட்டனர்.

## ஆங்கில நாடக மேடையேற்றம்

யாழ். பல்கலைக்கழக ஆங்கில மன்றம் நாளை பிற்பகல் மூன்று முப்பது மணியளவில் இரு ஆங்கில நாடகங்களை கைலாசபதி கலை அரங்கில் மேடையேற்றவுள்ளது ஈழத்து ஆங்கில எழுத்தாளர் அழகு சுப்பிரமணியம் எழுதிய ''அன்பே எழுந்திராய்'' மற்றும் ஆபிரிக்க எழுத்தாளர் பேர்ணாட் பிடாடியின் ''கிராமம்'' என்பனவே இவ்வாறுமேடையேற்றப்பட இருப்பவையாகும். தொடர்ந்து ஆங்கில நாடகங்களை சுதேசமயப்படுத்தல்' என்னும் தலைப்பில் பேராசிரியர் கா சிவத்தம்பி, வி. எல். ரவீந்திரன், சோ. பத்மநாதன், கே. கே. சோமசுந்தரம், கலாநிதி சுரேஷ் கனகராசா ஆகியோர் பங்குபற்றும் கலந்துரையாடலும் இடம்பெறவுள்ளது.

---

# 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



# லெப். கேணல் டேவிற்

(செல்வன் கிறிஸ்தோபர் அன்ரன் மரியதாஸ்)

வீரஜனனம்: 29. 01. 1966 வீரச்சாவு: 09. 06. 1991

சங்கத்தமிழ் மன்னர் ஆட்சிசெய்த எங்கள் கடல் மீது
சிங்களப்படையின் ஆதிக்கத்தைக் கண்டு சீறி
எழுந்தவனே!
எங்கள் கடல் மீது எதிரி தருகின்ற துன்பநிலை தீர்க்க
புறப்பட்ட கடற்புலியே!
பொங்கும் கடல்மீது வியூகம் தனை அமைத்து சிங்களப்
படை படகுகளோடு சிதறிஓட வைத்தவனே!
அழித்துவிடுவோம் எனக்கங்கணம் கட்டிவந்த அன்னியப்
படையை அதிரவைத்தவனே
தங்கத் தமிழ்ஈழம் தரணியிலே தலைநிமிர வேண்டும்
என்று உன்னைக் கொடுத்தவனே!
ஏழு ஆண்டு காலம் கடலிலே நீ படைத்த காவியங்கள்
எத்தனையோ ?- தமிழர்
வாழுகின்ற காலம் வரை உன்னை மறந்திடவும்
முடியுமோ?

இவருடன் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட ஏனைய போராளிகளுக்கும், படகோட்டிகளுக்கும் அஞ்சலிகளைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம் 09 06 93 இன்று இவரது இல்லத்தில் நடைபெறும் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் சகபோராளிகளையும், நண்பர்களையும், உறவினர்களையும் பணிவன்புடன் வேண்டிக் கொள்ளுகின்றோம்.

பொலிகண்டி கிழக்கு. - குடும்பத்தினர்

(5050)

---

விடியலை தேடிப் புறப்பட்ட
வேங்கை - நீ.''

''உனது இளமை வேகத்தின் மீது - கடல்
அன்னைக்கும் மோகமோ...?
அலைகளிற்குள் உன்னை
அணைத்துவிட்டாலும் .. நீ கொண்ட....
இலட்சியம்...
ஈடேறும் நாள் தூரத்திலில்லை...''

- பெற்றோர்,
சகோதரர்கள்.

வரணி வடக்கு,
வரணி.

[5106]

---

# நீங்காத நினைவாக ஓராண்டு



# லெப். வேந்தன் / கில்மன்

(சாள்ஸ் அன்ரனி விசேட படைப்பிரிவு)

[வேலாயுதபிள்ளை வரதன்]

(பளை ம. வி. உயர்தர மாணவன்)

மகனாக: 24. 11. 1970 மாவீரனாக: 9. 6. 1992

தம்பி!
இன்றோடு நீ மறைந்து ஓராண்டு ஆனதடா
மண்ணோடு மண்ணாகி மண்ணுக்காய் மடிந்தாயடா
தமிழ்மக்கள் மானம் காக்க தலை மேலே
விழுப்புண் ஏந்தி வீரசொர்க்கம் கண்டாயடா
தாய் மண்ணை மீட்க தானைத் தலைவன் வழி
நடந்தாயடா
விதிமுடிந்து நீபோனாலும் மதி நிறைந்த உந்தன்
முகம் மறக்காது! மறையாது!!

உன் நினைவால் வாடும்,
அப்பா, அம்மா. அத்தான்,
அக்கா, மருமகன்.

வேளாவை,
அளவெட்டி.

(5108)

---

[illegible] (பாண்டியன் சுந்தரதாஸ்-திருமலை)

லெப்.கேணல் டேவிற் (கிறிஸ்தோப்பர் அன்ரனி மரியதாஸ்- பலாலிக்குடியேற்றம் பொலிகண்டி,வல்வெட்டித்துறை-யாழ்')

லெப்.கரிகாலன் (சிதம்பரப்பிள்ளை சுரேஷ்-வரணி வடக்கு, கொடிகாமம்-யாழ்)

2-ம் லெப்.மாணிக்கம் (சண்முகநாதன் கஜேந்திரன் மூளாய்வீதி, கலட்டி, வட்டுக்கோட்டை-யாழ்)

புலவர் (சிறிஆனந்தகுரு சியாமளன்-கொம்மாந்துறை. உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை-யாழ்)

மட்டுநகரில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கைகளில் கொல்லப்பட்டகளுவங்கேணி 2 ஐச் சேர்ந்த சிறுவன், இளைஞன் ஆகிய 2 தமிழர்கள்

1992ஆம் ஆண்டு திருமலை- மூதூர், அரிப்புச்சந்தியில் சிறிலங்கா இராணுவத்தினர் மீது மேற்கொண்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய,

மேஜர் வெற்றிச்செல்வன்/கெரில்லா (அழகையா கோமேஸ்வரன் - 3ம் குடியிருப்பு, கிளிவெட்டி, மூதூர்- திருமலை)

லெப்.மலைமான்/நந்தி (தேவதாசன் கங்காதரன்- 3-ம் வட்டாரம்,சாம்பல்தீவு திருமலை)

லெப்.தர்மராஜா (ஜோசப் அன்ரனி அலெக்ஸாண்டர்-11/12 தக்கையாலேன், மின்சார நிலையவீதி- திருமலை)

2-ம் லெப்.மனோரமலை/விவேகன் இராயப்பு அன்ரனி-ஆலங்கேணி,கிண்ணியா-திருமலை)

2-ம் லெப்.மணிமொழி/ரங்கன் (வல்லிபுரம் கமலதேவன்-திரியாய்-திருமலை)

அறிவுநம்பி/குணா (உருத்திரமூர்த்தி சிறிகாந்- 53, சிவன் வீதி, திருகோணமலை)

திருவருட்செல்வன்/காளிதாஸ் (வைரமுத்து கோணேஸ்வரன் - 8-ம் வட்டாரம், சாம்பல்தீவு - திருமலை)

மன்னார் - சிறுநாவற்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மீதான அதிரடித் தாக்குதலின் போது வீரச்சாவெய்திய-

மேஜர் ரவிசங்கர் (யூலியஸ் வின்சன் கெனடி - புதிய வீட்டுத்திட்டம், தாழ்வுப்பாடு வீதி, சாவற்காடு - மன்னார்)

லெப். அரவிந்தன் (வேதநாயகம் பிரான்சிஸ் சேவியர் - 7-ம் வட்டாரம், விடத்தல்தீவு - மன்னார்)

மேஜர் கந்தன் (நாகேந்திரம் பாலசுந்தரம் - தருணன் வீதி, ஆலங்கேணி - பூநகரி)

2-ம் லெப். உதயச்சந்திரன் (சேதுபாண்டித் தேவர் இராமமணிசேகரன் மகாதேவர் - திருநெல்வேலி மாவட்டம் - தமிழ்நாடு)

மணலாற்றுச்சமரில் 08. 06. 1992 அன்று விழுப்புண் அடைந்து சிகிச்சையின் போது வீரச்சாவெய்திய-

லெப். வேந்தன்/கில்மன் (வேலாயுதபிள்ளை வரதன் - ''திருவாதிகை'' வேளாவை, அளவெட்டி - யாழ். )

திருமலை - ஈச்சலம்பற்றை பூநகரிப் பகுதியில் சிங்கள ஊர்காவல் படையினரால் வெட்டிக் கொலைசெய்யப்பட்ட அப்பகுதியைச் சேர்ந்த 2 தமிழர்கள்

மட்டு - போரதீவு- பொருகாமம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ் இளைஞன்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி/6788)

### சிந்தனைக்கு

அனவரிடமும் கருணைகாட்ட வேண்டும். ஆனால், எல்லோரிடமும் நெருங்கிப்பழகுவது உசிதமானதல்ல.

– தாமஸ் ஏ. கெம்பிஸ்.

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 09-06-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05

## இஸ்ரேலுடன் உறவு?

இஸ்ரேலுடன் சிறிலங்கா ராஜீக உறவை ஏற்படுத்துவது குறித்து பேசப்படுகின்றது. கெடுபிடிப் போர் காலத்தில், பலநாடுகளின் பார்வையில் 'தீண்டத்தகாத தேசம்' என இஸ்ரேல் குறித்து இருந்த நிலை இன்று மாறியுள்ளது. இந் நிலையில். சிறிலங்கா இஸ்ரேலுடனான உறவை ஏற்படுத்திக் கொள்வதென்பது ஒன்றும் ஆச்சரியத்திற்குரியதோ அன்றி அதிர்ச்சிக்குரியதோ அல்ல.

அத்தோடு, இஸ்ரேலுடனான உறவு குறித்து எவரும் இன்று பெரியளவில் ஆட்சேபிப்பதற்குமில்லை. எண்பதுகளின் மத்தியில், இஸ்ரேலுடன் சிறிலங்கா உறவு கொண்டபோது இந்தியாவிடம் இருந்து பலத்த ஆட்சேபம் எழுந்தது. இதன் விளைவு 1987ஆம் ஆண்டு இலங்கை - இந்திய சமாதான உடன்படிக்கைகளின்படி, சிறிலங்காவில் செயற்பட்டு வந்த இஸ்ரேலிய இராணுவ பயிற்சியாளர்கள் வெளியேற்றப்பட்டார்கள். பின்னர், ஜனாதிபதி பிரேமதாசா இஸ்ரேலிய நலன் காக்கும் பிரிவையே மூடிவிட்டார். ஆனால்,இன்று அந்நிலை இல்லை. ஏனெனில், இந்தியாவே இஸ்ரேலுடன் குலாவத் தொடங்கிவிட்டது.

இந்நிலையிலேயே, ''இஸ்ரேலுடன் ராஜீக உறவை மீண்டும் ஏற்படுத்திக்கொள்ள அவசியம் ஏற்படும் போது அவை குறித்து உரிய பரிசீலனை செய்யப்படும்''என அமைச்சர் ஹரல்ட்ஹேரத்தெரிவித்துள்ளார். அதாவது. இஸ்ரேலுடன். இதுவரை உடன் தொடர்பு ஏற்படுத்தப்படவில்லையாயினும் இதனைஅரசாங்கம் சாதகமாகப் பரிசீலனை செய்யத்தயாராக உள்ளது என்பதே அர்த்தமாகும்.

ஆனால், இஸ்ரேலுடன் தொடர்பு கொள்வதற்குப் பொருத்தமான சூழ்நிலை எது என்பதே இன்றுள்ள கேள்வி. சர்வதேச சூழ்நிலை ஓரளவு சாதகமாக இருப்பினும், இஸ்ரேலுடனான உறவு உள்நாட்டில் எந்தளவிற்குப் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதைப் பொறுத்தே தொடர்பு கொள்வது குறித்து ஐ. தே. க. அரசாங்கம் சிந்திக்க முடியும். கடந்த மாதம் நடந்த மாகாண சபைத்தேர்தலில், ஐ. தே. கட்சியின் செல்வாக்கு சிங்களவர் மத்தியில் குறிப்பிடக் கூடிய அளவில் சரிந்துள்ள

### அராலி குண்டு வெடிப்பு சம்பவம்

# புகைப்படங்களை கொண்டு முடிவுக்கு வரமுடியாது

## ஆணைக்குழு முன் சாட்சியம்

[கொழும்பு]

குண்டு வெடித்த இடத்திலிருந்து எடுக்கப்பட்ட புகைப் படங்களைக் கொண்டு சம்பவம் பற்றிய உண்மையான முடிவுக்கு வருவது ஒரு தவறான அடிகோலல் ஆகும். இவ்வாறு அராலித்துறை குண்டு வெடிப்பு சம்பவம் பற்றிய ஜனாதிபதி ஆணைக்குழுவிசாரணையின் போது சாட்சியம் அளித்த சிரேஷ்ட அரசாங்க இரசாயன பகுப்பாய்வாளர் காமினி குணதிலக்க தெரிவித்தார்.

குண்டு வெடிப்பு சம்பவம் பற்றி பிரிட்டனைச் சேர்ந்த வெடிகுண்டு நிபுணர் திரு.ஆர். வயாட தெரிவித்துள்ள அபிப்பிராயங்கள் தொடர்பாக சட்டத்தரணியின் கேள்விக்கு பதிலளித்து அவர் மேலும் கூறுகையில்;

திரு. வயாட் தனது அறிக்கையில் இரு அபிப்பிராயங்களைத் தெரிவித்துள்ளார். வெடிக்கக்கூடிய,கருவியொன்று நிலத்துக்குள் அல்லது நிலத்திற்கு மேல் வைக்கப்பட்டு இருக்கலாம் அல்லது வெடிக்கக் கூடிய கருவி ஒன்று வாகனத்துடன் இணைக்கப்பட்டிருக்கலாம். புகைப்படங்களைக் கொண்டு ஒரு முடிவுக்கு வருவது கடினமானதாகும்.

சம்பவம் நடைபெற்றஇடத்தில் எடுத்த புகைப்படங்களை மட்டும் ஆராய்ந்து என்னால் அபிப்பிராயம் கூறமுடியாது. புகைப்படங்கள் தவறானஎண்ணத்தைக் கொடுக்கக் கூடும். அவை பல கோணங்களில் எடுக்கப்பட்டவையாகும். புகைப் படங்களிலுள்ள நிறங்கள்உண்மையான நிறங்களுடன் மாறுபட்டவையாகும். நிறப்படங்களைத் தயாரிப்பதற்கு பல பொருள்கள் பயன்படுத்தப்படுகின்றன. புகைப்படத்தைக் கொண்டு உண்மையான நிலையைக் கணிப்பதுகடினமானதாகும்.

வாகனத்தின் முன்சில்லுகள் நிலக்கண்ணியில் சிக்காதது ஏன் என்பதை நினைத்துப் பார்க்க கடினமானதாக இருக்கின்றது என்று வயாட் தெரிவித்துள்ளமைபற்றிஎன்னகருதுகிறீர்கள் எனக் கேட்கப்பட்ட போது,

வாகனம் வளைவில் இருந்ததா அல்லது வாகனத்தின் முன்பகுதி பாரம் நிலக்கண்ணியை வெடிக்க வைப்பதற்கு போதுமானதாக இருந்ததா என்பது பற்றி எங்களுக்கு ஒன்றும் தெரியாது என்று சாட்சி பதில் அளித்தார்.

இதேவேளை விசாரணைக் குழுவின் முன்பாக காலஞ்சென்ற ஜெனரல் கொப்பேகடுவவின் நலன்களை கவனிப்பதற்காக நியமிக்கப்பட்டிருக்கும் சட்டத்தரணி றஞ்சித்அபயசூரியா,பிரிட்டனைச்சேர்ந்த வெடிபொருள் நிபுணரான வயாட் ஆணைக்குழு முன்பாக சாட்சியம் அளிப்பது அவசியம் என்றும், எனினும் அவர் கொழும்பு வருவதற்கான திகதி இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை என்றும், இது பற்றி தீர்மானிக்க இன்னும் மூன்று அல்லது நான்கு வாரங்கள் எடுக்கலாம் என்றும் தெரிவித்தார்.

அந்தநிபுணர்வரும்வரையில் நாங்கள் சிறிலங்காவில் ஓய்வு எடுக்க வேண்டும் என்றா கருதுகின்றீர்கள் என்று ஆணைக் குழுவின் தலைவர் வினா எழுப்பினார்.

மற்றுமொரு சந்தர்ப்பத்தில் சட்டத்தரணி அபயசூரிய, முகம்மது மலை உச்சிக்கு செல்ல முடியாவிட்டால் மலை முகம்மதுவிடம் வரத்தானே வேண்டும் என்று தெரிவித்த போது, ஆணைக்குழு லண்டனுக்கு செல்ல வேண்டும் என்றா சொல்லுகிறீர்கள் என்று ஆணைக்குழுத் தலைவர் கேள்வி எழுப்பினார் என்பது குறிப்பிடத்தக்கது.

### ஹெல உறுமய குழு

## நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு நல்க வேண்டாம்

### சு. க. பொதுச்செயலாளர்

[கொழும்பு]

ஹெல உறுமய குழுவினரின் நடவடிக்கைகளிலிருந்து ஒதுங்கியிருக்கும்படி சிறிலங்கா சுதந்திரக் கட்சித் தலைமைப்பீடம் அதன் பாராளுமன்ற உறுப்பினர்கள், அங்கத்தவர்கள் மற்றும் ஆதரவாளர்களுக்கு கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக அக்கட்சியின் செயலாளர் தர்மசிறி சேனநாயக்க கொழும்பு பத்திரிகையொன்றிற்கு தெரிவிக்கையில்; மேலும் ஹெல உறுமய குழுவினரின் நடவடிக்கைகள் கட்சியின் நீண்டகால நலன்களைப் பாதிக்கும் எனவும், ஹெல உறுமய ஸ்தாபகரான திலக் கருணாரத்ன கட்சியிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார் எனவும் தெரிவித்தார்.

### இசை விழாவும் இலக்கிய விழாவும்

(குருநகர்)

யாழ்- பிரதான வீதி, திருமறைக் கலாமன்றக் கலையரங்கில் மன்றம் எடுக்கும் இசை விழா இம்மாத நடுப்பகுதியிலும் - இலக்கிய விழா பிற்பகுதியிலும் சிறப்பாக நடை

# 800 சீமெந்து தொழி. ஊழியர் வேலையிழக்கும் அபாயம்

## மக்கள் மயமாக்கலின் விளைவு

[கொழும்பு]

புத்தளம், காலி சீமெந்து தொழிற்சாலைகள் மக்கள் மயமாக்கப்படுவதன் விளை என்றும், இதற்கான மேலிட உத்தரவு முன்னறிவித்தல் ஜூலை மாதம் சம்பந்தப்பட்ட ஊழியர்களுக்கும் அதிகாரி தளம், காலி சீமெந்து தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன.

சீமெந்து தொழிற்சாலைகள்

## துணிவகை கடத்துவதில் தூதுவரக ஊழியர் தொடர்பு

(கொழும்பு)

கொழும்பிலுள்ள வெளிநாட்டுத் தூதுவராலயத்தில் பணியாற்றும் சிறிலங்காப் பிரஜை ஒருவர் 11 மில்லியன் ரூபா பெறுமதியான துணி வகைகளை சிறிலங்காவுக்குள் கடத்தியது தொடர்பாக 34 மில்லியன் ரூபா தண்டம் பிரதிச் சுங்கப் பணிப்பாளரால் விதிக்கப்பட்டுள்ளது. தண்டப் பணத்தைச் செலுத்தும் வரை அவரை நீதிமன்றம் விளக்க மறியலில் வைக்க உத்தரவிட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட நபர் தூதுவராலயம் ஒன்றிற்கு வரும் பொதிகளைத் துறைமுகத்திலிருந்து வெளியில் எடுக்கும்பணியில் அமர்த்தப்பட்டிருந்தார்.

கடந்த ஆறு மாதங்களில் இந்த அதிகாரி 12க்கும் அதிகமான பொதிகளைத் துறைமுகத்திலிருந்து எடுத்திருந்ததாகச் சுங்கத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். பொதிகளில் ஆயுதங்களும் கடத்தப்பட்டிருக்கலாம் என்று அதே வட்டாரங்கள் சந்தேகம் தெரிவிக்கின்றன.

இந்தப் பேர்வழிக்கும் கொழும்பிலுள்ள பெரிய வியாபாரிகள் சிலருக்கும் தொடர்பு இருப்பதாக விசாரணையிலிருந்து தெரிய வருகிறது. மேற்படி நபர் கைதாகியதை அடுத்து கொழும்பில் மூன்று வியாபாரிகள் தலைமறைவாகியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

### பூநகரி – சங்குப்பிட்டி

## பாதையை திறந்துவிட ஜனாதிபதியிடம் கோரிக்கை

(கொழும்பு)

யாழ். குடாநாட்டிலிருந்து பயணம் செய்வோரும் அங்கு பயணமாவோருமாகிய இப் பயணிகளுக்குரிய ஆபத்தற்றதும், துரிதமாக பயணம் செய்யக் கூடியதுமான சங்குப்பிட்டி -பூநகரி பாதை திறந்து விடப்படாததினால்சொல்லொணா துன்பங்களுக்கும் உயிரிழப்புக்களுக்கும் உள்ளாகி வருகின்றார்கள் என்றும் இதன் காரணமாக இப் பாதையினை திறப்பதற்கு யூ. என். எச். சி. ஆர்.எடுத்துவரும் நல்லெண்ண முயற்சிகளுக்கு அரசாங்கம் உற்சாகமளிக்க ஒத்துழைப்பினையும், ஆதரவினையும் வழங்கி உதவ வேண்டுமென்று ஜனாதிபதியிடம் தமிழ் எம். பி. ஒருவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

அண்மைக்காலமாக இங்கு அடிக்கடி இடம்பெற்று வரும் சூட்டுச் சம்பவங்களையும் வள்ளங்களைத் தாக்கி மூழ்கடிக்கும் சம்பவங்களையும் சுட்டிக்காட்டி இதில் பெருந்தொகையானோர் பலியாகிவரும் துர்ப்பாக்கிய அவல நிலையை உணர்த்தியும் எழுதியிருக்கும் இக்கடிதத்தில் ஜனாதிபதி தலையிட்டு ஆவன செய்ய வேண்டுமென்று அவர் கோரியுள்ளார்.

### சைவசித்தாந்த கருத்தரங்கு

(குருநகர்)

யாழ்-திருமறைக் கலாமன்றம் பிரதான வீதி கேட்போர் கூடத்தில் இன்று மாலை 4.30 மணிக்கு சைவசித்தாந்த ஆய்வு வட்டக் கருத்தரங்கு நடைபெறும்.

சிவஞானபோத வகுப்பின் ஆறாம் சூத்திரம் 2-ஆம் அதிகாரம் பற்றி ஆசிரியர் ஆ.சபாரத்தினம் விளக்கம் அளிப்பார். (21)

### கல்வி வளர்ச்சிக் கழகம் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

நவாலிப் பகுதி மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காகத் தினமும் இரவு வேளைகளில் நவாலி அரசடி மகாவித்தியாலயத்தில் 'பெற்றோமாக்ஸ்' மூலம் வெளிச்சம் வழங்கப்படுகிறது.

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் கல்வி வளர்ச்சிக் கழகத்தின் இச்செயற்பாட்டால் 80க்கும் மேற்பட்ட மாணவ மாணவியர் நன்மையடைந்து வருகின்றனர் என நவாலி மகாவித்தியாலய உப அதிபர் சி. நாகையா தெரிவித்தார்,

அந்நிலை இல்லை. ஏனெனில், இந்தியாவே இஸ்ரேலுடன் குலாவத் தொடங்கிவிட்டது.

இந்நிலையிலேயே, ''இஸ்ரேலுடன் ராஜீக உறவை மீண்டும் ஏற்படுத்திக்கொள்ள அவசியம் ஏற்படும் போது அவை குறித்து உரிய பரிசீலனை செய்யப்படும்''என அமைச்சர் ஹரல்ட்ஹேரத்தெரிவித்துள்ளார். அதாவது. இஸ்ரேலுடன். இதுவரை உடன் தொடர்பு ஏற்படுத்தப்படவில்லையாயினும் இதனைஅரசாங்கம் சாதகமாகப் பரிசீலனை செய்யத்தயாராக உள்ளது என்பதே அர்த்தமாகும்.

ஆனால், இஸ்ரேலுடன் தொடர்பு கொள்வதற்குப் பொருத்தமான சூழ்நிலை எது என்பதே இன்றுள்ள கேள்வி. சர்வதேச சூழ்நிலை ஓரளவு சாதகமாக இருப்பினும், இஸ்ரேலுடனான உறவு உள்நாட்டில் எந்தளவிற்குப் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதைப் பொறுத்தே தொடர்பு கொள்வது குறித்து ஐ. தே. க. அரசாங்கம் சிந்திக்க முடியும். கடந்த மாதம் நடந்த மாகாண சபைத்தேர்தலில், ஐ. தே. கட்சியின் செல்வாக்கு சிங்களவர் மத்தியில் குறிப்பிடக் கூடிய அளவில் சரிந்துள்ள நிலையில் சிறுபான்மையினரான முஸ்லிம்களின் வாக்குகள் பெருமளவு கைகொடுத்தன. இந்நிலையில் பாராளுமன்றத் தேர்தல், ஜனாதிபதித்தேர்தல் என்பன இவ்வருடமோ, அடுத்தவருடமோ நடைபெறும் என்ற நிலையில், இஸ்ரேலுடனான உறவிற்கு ஐ. தே. கட்சியை பொறுத்து பொருத்தமான காலப் பகுதியா என்பது கேள்விக்குரியதே.

ஆனால், அமைச்சர் குறிப்பிட்டது போன்று 'அவசியம் ஏற்படும் போது உறவு கொள்ளப்படும்' எனின் அதில் அவசியம் என்பது என்ன? சிறிலங்காவைப் பொறுத்து இஸ்ரேலுடனான உறவு ஒரு விடயத்தில், இருகாரணங்களுக்காக மட்டுமே அவசியமானதாகும். இதில் விடயம் என்னவெனில் தமிழர் தேசிய இனவிடுதலைப் போராட்டத்திற்கு எதிரான போர். காரணம், ஒன்று ஆயுதம்; மற்றையது பயிற்சி, இவையே இஸ்ரேலிடம் இருந்து முன்னரும் பெறப்பட்டவை.

அதாவது, குறைந்த எண்ணிக்கையிலான இராணுவத்தினைக் கொண்டு தீவிரவாதிகளுக்கு எதிராக எவ்வாறு போரிடுவது என்பதே சிறிலங்கா இஸ்ரேலுடனான உறவில் எதிர்பார்க்கக் கூடிய முக்கிய உதவியாகும். 15 லட்சத்திற்கும் மேற்பட்ட இராணுவத்தினரைக் கொண்ட இந்தியாவே இஸ்ரேலிடம் இருந்து இதையே எதிர்பார்த்து நிற்கின்றது. இந்நிலையில், புலிகளுடனான போரில் மனோபலம் சிதைந்து நிற்கும் இராணுவத்தைக் கொண்டுள்ள சிறிலங்கா இஸ்ரேலிடம் இதற்கான ஆலோசனைகளைப் பெற முயற்சிக்கலாம்.

ஆனால், இஸ்ரேல், இந்தியா, சிறிலங்கா என்ற வரிசையில், யாராக இருந்தாலும், தேசிய இனவிடுதலைப் போராட்டங்கள் எதையும் இராணுவத் தீர்வின் மூலம் வெற்றிகண்டுவிட முடியாது. இதில் இஸ்ரேலிடம் இருந்து ஆலோசனைகளையும், உதவிகளையும் கோர விளையும் சிறிலங்கா, இந்தியா என்பன மட்டுமல்ல, அதற்கு ஆலோசனை வழங்கமுடியும் எனக்கருதும்இஸ்ரேல் கூட தோல்வியே கண்டுள்ளது. அதில் இஸ்ரேல் வெற்றி பெற்றிருக்குமேயானால், தற்பொழுதும் இஸ்ரேல்தான்ஆக்கிரமித்த பகுதியில் பாலஸ்தீனியர்களின் தாக்குதல்களுக்கு உள்ளாகவேண்டியோ, அன்றி பாலஸ்தீனருடன் பேசித்தான் இப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்ற அவசியமோ ஏற்பட்டிருக்காது. இதனை சிறிலங்கா ஆட்சியாளர்களும்புரிந்து கொள்ளுதல் நல்லது.

புகைப்படங்கள் தவறானஎண்ணத்தைக் கொடுக்கக் கூடும். அவை பல கோணங்களில் எடுக்கப்பட்டவையாகும். புகைப்படங்களிலுள்ள நிறங்கள்உண்மையான நிறங்களுடன் மாறுபட்டவையாகும். நிறப்படங்களைத் தயாரிப்பதற்கு பல பொருள்கள் பயன்படுத்தப்படுகின்றன. புகைப்படத்தைக் கொண்டு உண்மையான நிலையைக் கணிப்பதுகடினமானதாகும்.

அதன் பாராளுமன்ற உறுப்பினர்கள், அங்கத்தவர்கள் மற்றும் ஆதரவாளர்களுக்கு கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக அக்கட்சியின் செயலாளர் தர்மசிறி

...ளைப் பாதிக்கும் எனவும், ஹெல உறுமய ஸ்தாபகரான திலக் கருணாரத்ன கட்சியிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார் எனவும் தெரிவித்தார்.

நடைபெறும்.

சிவஞானபோத வகுப்பின் ஆறாம் சூத்திரம் 2-ஆம் அதிகாரம் பற்றி ஆசிரியர் ஆ.சபாரத்தினம் விளக்கம் அளிப்பார். (21)

## இசை விழாவும் இலக்கிய விழாவும்

(குருநகர்)

யாழ்- பிரதான வீதி, திருமறைக் கலாமன்றக் கலையரங்கில் மன்றம் எடுக்கும் இசை விழா இம்மாத நடுப்பகுதியிலும் - இலக்கிய விழா பிற்பகுதியிலும் சிறப்பாக நடைபெறுமென அறிவிக்கப்படுகிறது.

இம்மாத நடுப்பகுதியில் 18ஆம், 19ஆம், 20ஆம் திகதிகளில் மூன்று தினங்கள் இசை விழாவும், பிற்பகுதியில் 25ஆம் 26 ஆம், 27ஆம் திகதிகளில் மூன்று தினங்கள் இலக்கிய விழாவும்நடைபெறுமெனதெரிவிக்கப்படுகிறது. (21)

# 800 சீமெந்து தொழி. ஊழியர் வேலையிழக்கும் அபாயம்

### மக்கள் மயமாக்கலின் விளைவு

[கொழும்பு]

புத்தளம், காலி சீமெந்து தொழிற்சாலைகள் மக்கள் மயமாக்கப்படுவதன் விளைவாக காங்கேசன் சீமெந்து தொழிற்சாலை ஊழியர்கள் 800பேர் வேலை நீக்கம் செய்யப்படவுள்ளார்கள் என கொழும்பு தமிழ் நாளேடுஒன்று தெரிவிக்கின்றது.

இதுபற்றிமேலும்தெரியவருவதாவது: இந்தஊழியர்கள் எதிர் வரும்ஆகஸ்ட் முதல் வேலைநீக்கம்செய்யப்படவிருக்கிறார்கள் என்றும், இதற்கான மேலிட உத்தரவு முன்னறிவித்தல் ஜூலை மாதம் சம்பந்தப்பட்ட ஊழியர்களுக்கும் அதிகாரிகளுக்கும் அனுப்பிவைக்கப்படவிருப்பதாகவும் தெரிவித்துள்ளது.

1990 நடுப்பகுதியில் தோன்றிய யுத்தநிலைமைகளையடுத்து இந்த சீமெந்து தொழிற்சாலை இயங்காமல் இருந்து வருகிறது எனினும் சீமெந்து கூட்டுத்தாபனத்தின் கீழ் புத்தளம், காலி சீமெந்து தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன.

சீமெந்து தொழிற்சாலைகள் அண்மையில் மக்கள் மயமாக்கப்பட்டதனால் தொடர்ந்தும் வேதனங்கள் வழங்கமுடியாத நிலை தோன்றிஇருப்பதனால் காங்கேசன் சீமெந்து தொழிற்சாலை ஊழியர்களான இந்த 800பேரும் வேலை இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக அந்த நாளேடு மேலும் தெரிவித்துள்ளது.

## சந்தை விலை விபரம் (07-06-1993)

### யாழ். மாவட்ட சராசரி சில்லறை விலைகள்

| தொ. இல. | பொருள்கள் | அலகு | திருநெல்வேலி | பெரிய கடை | சுன்னாகம் | அச்சுவேலி | சங்கானை | நெல்லியடி | பருத்தித்துறை | கொடிகாமம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| 01. | குத்தரிசி | கி.கி | 29.25 | 27.33 | 30.15 | 29.50 | 29 50 | 28.50 | 28.30 | 31.00 |
| 02. | கோதுமை மா | ,, | 13.00 | 12.65 | 13.15 | 13.50 | 13.00 | 13.00 | 13.30 | 13.50 |
| 03. | சீனி | ,, | 63.50 | 53.00 | — | 68.65 | 57.50 | — | 56.65 | — |
| 04. | கத்தரி | ,, | 32.30 | 45.30 | 24.00 | 37.00 | 27.65 | 30.00 | 32.30 | 38.30 |
| 05. | வெண்டி | ,, | 24.30 | 38.30 | 27.65 | 35.00 | 20.65 | 35.00 | 40.00 | — |
| 06. | பாகல் | ,, | 27.65 | 48.30 | 31.65 | 59.30 | 43.30 | 35.00 | 42.65 | 42.30 |
| 07. | புடோல் | ,, | 17.65 | 31.65 | 16.30 | 22.50 | 25.00 | 20.00 | 24.30 | — |
| 08. | பயற்றங்காய் | ,, | 35.65 | 55.00 | 29.30 | 36.65 | 47.30 | 30.00 | 30.65 | 27.67 |
| 09. | தக்காளி | ,, | 93.30 | — | — | — | 60.00 | — | — | — |
| 10. | வாழைக்காய் | ,, | 32.30 | 43.65 | 33.30 | 37.65 | 31.65 | 40.00 | 35.00 | 32.30 |
| 11. | பீற்றூட் | ,, | 23.30 | 33.30 | 25.00 | 17.00 | 45.00 | 28.00 | — | — |
| 12. | தேங்காய் | ஒன்று | 18.10 | 18.60 | 16.30 | 17.00 | 17.50 | 17.00 | 18.50 | 11.15 |
| 13. | பச்சைமிளகாய் | கி.கி | 118.30 | 106.65 | 90.00 | 200.00 | 133.30 | 100.00 | 116.65 | 100.00 |
| 14. | எலுமிச்சை | ,, | 136.65 | 165.00 | 133.30 | 123.30 | 155.00 | 100.00 | 123.30 | 110.00 |
| 15. | வெங்காயம் | ,, | 15.50 | 19.30 | 15.30 | 21.30 | 20.15 | 22.50 | 21.50 | 22.00 |
| 16. | கப்பல் வாழைப்பழம் | ,, | 31.00 | 32.00 | 35.00 | 32.30 | 30.00 | 50.00 | 35.00 | 35 00 |
| 17. | இறால் | ,, | 110.00 | 96.65 | 100.00 | 165.00 | 93.30 | 120.00 | 90.00 | 50.00 |
| 18. | பெரியமீன் | ,, | 175.00 | 175.00 | 200.00 | 185.00 | 125.00 | 185.00 | 175.00 | 120.00 |
| 19. | சிறியமீன் | ,, | 160.00 | 110.00 | 100.00 | 115.00 | 100.00 | 95.00 | 50.00 | 37.50 |
| 20. | முட்டை | ஒன்று | 09.00 | 09.80 | 08.50 | 08.40 | 07.50 | 08.00 | 08.65 | 06.80 |

தகவல்:- தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம்

## கல்வி வளர்ச்சிக் கழகம் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

நவாலிப் பகுதி மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காகத் தினமும் இரவு வேளைகளில் நவாலி அரசடி மகாவித்தியாலயத்தில் 'பெற்றோமாக்ஸ்' மூலம் வெளிச்சம் வழங்கப்படுகிறது.

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் கல்வி வளர்ச்சிக் கழகத்தின் இச்செயற்பாட்டால் 80க்கும் மேற்பட்ட மாணவ மாணவியர் நன்மையடைந்து வருகின்றனர் என நவாலி மகாவித்தியாலய உப அதிபர் சி. நாகையா தெரிவித்தார்,

இதனால் ஆண்டு எட்டு முதல் க. பொ. த. உயர்தர வகுப்பு மாணவர்கள் வரை இங்கு கல்வி கற்று வருகின்றனர் எனவும், இரவு வேளைகளில் நவாலி மகாவித்தியாலய ஆசிரியர்கள் மேற்பார்வை செய்து வருகின்றனர் என மேலும் தெரிவித்தார்.

இதேவேளை திங்கள், புதன் வெள்ளி ஆகிய தினங்களில் கல்வி வளர்ச்சிக் கழகத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட வகுப்புக்கள் தொடர்ச்சியாக நடைபெற்று வருவதாகவும் தெரிவித்தார். (05)

## மகா கும்பாபிஷேகம்

மீசாலை தெற்கு அருள்மிகு சித்திரவேலாயுதசுவாமி ஆலய பஞ்சகுண்ட யாக மகாகும்பாபிஷேகம் இன்று புதன்கிழமை ''வேதாகம சோதிடபூஷணம்சிவாசார்ய திலகம் சிவஸ்ரீ சி. சிதம்பரநாதக் குருக்கள் தலைமையில் நடைபெறும். இவ்விழாவில் நல்லை ஆதீன முதல்வர் மற்றும் பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, ஆத்மஜோதி நா.முத்தையா ஆகியோர் சிறப்புரையாற்றுவர்.

## சுகாதாரக் கருத்தரங்கு

சங்கிலியன் மன்றத்தின் ஆதரவில் நாளை வியாழக்கிழமை பிற்பகல் மூன்று முப்பது மணியளவில் காசிப்பிள்ளை வித்தியாலயத்தில் சுகாதாரக் கருத்தரங்கு நடாத்தப்பட ஏற்பாடாகியுள்ளது. இக் கருத்தரங்கில் யாழ்ப்பாண மாநகர சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் இ. தெய்வேந்திரன் ''இருதய வியாதியும் தடுப்பு முறையும்'' என்னும் பொருள் பற்றி கருத்துரை வழங்கவுள்ளார்.

ஈழநாதம்

# பயிற்சிக் கருத்தரங்கு

யாழ். கோட்டப் பாடசாலைகளின் ஆரம்ப பிரிவினருக்கான மெய்வல்லுநர் போட்டி பற்றிய பயிற்சிக் கருத்தரங்கு நாளை வியாழக்கிழமை மு.ப. 9-30 மணிக்கு யாழ். கனகரத்தினம் ம.ம.வித்தியாலயத்தில் இடம்பெறும். ஒவ்வொரு பாடசாலைகளிலுமிருந்து ஓர் ஆசிரியரை இக்கருத்தரங்கிற்கு அனுப்பி வைக்குமாறு அதிபர்களை யாழ் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. வேலாயுதம் கேட்டுக்கொண்டுள்ளார்.

# சீதனக் கொடுமையால் 11 ஆயிரம் பெண்கள் மரணம்

இந்தியாவில் கடந்த மூன்று வருடங்களில்சீதனக்கொடுமை தொடர்பாக 11 ஆயிரத்து இருநூறுக்கும் மேற்பட்ட மரணங்கள் ஏற்பட்டுள்ளதாக பதிவு செய்யப்பட்டுள்ளது. இத்தகவலை ஐ நா. ஆதரவுடனான அனைத்துலக பெண்கள் மனித உரிமைக்கான அமைப்பு வாஷிங்டனில் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளது.

# தொழில் நுட்பக் கல்லூரி இறுதிப் பரீட்சை-1992

பின்வரும் பயிற்சி நெறிகளுக்குரிய மேற்படி இறுதிப் பரீட்சைகள் எதிரே குறிப்பிட்ட திகதிகளில் ஆரம்பமாகும் என பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார்.


| பயிற்சி நெறிகள் | பரீட்சை ஆரம்பிக்கும் திகதிகள் |
|---|---|
| (1) D113—H.N D,A 2-ம் வருடம் | 14-06-1993 |
| (2) D101, D114—H.N.D.C/H.N D.A 3-ம் வருடம் | 21-06-1993 |
| (3) D104, D118—H.N.D.C/H.N.D.A 4-ம் வருடம் | 28-06-1993 |
| (4) N.C.T (C.E/M.E/E.E/G.S) | 28-06-1993 |
| (5) C-90—N.C.A.T | 01-07-1993 |

மேற்படி பரீட்சைக்குரிய அனுமதிப் பத்திரங்களைத் தங்களுடைய மாணவர் பிரவேச அனுமதியட்டையைப் பகுதித் தலைவரிடம் சமர்ப்பித்து பரீட்சை ஆரம்பிக்கும் திகதிக்கு முதல்வரும் அலுவலக நாளில் பெற்றுக்கொள்ளவும்.

அதிபர்,
தொழில் நுட்பக் கல்லூரி.
யாழ்ப்பாணம்.

08-06-1993 (சி-6798)

# ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு:
**1927-05-05**

உதிர்வு:
**1992-05-24**

அமரர்
**சண்முகம் சுப்பிரமணியம்**
(பிரபல தவில் வித்துவான்)

திதி: 09-06-1993

அன்பு பொழிந்து அமுதமொழி பேசி அரவணைத்து
எங்களையெல்லாம் ஆளாக்கிய அருமைத் தெய்வமே!
பிரிவு இயற்கையானாலும் வதைக்கிறது எம் இதயம்
எங்களை நினைத்து வாழ்ந்த நீங்கள் இப்போது
எங்களையே சுற்றி நிற்பீர்கள்
உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

# சாயிபாபா ஆச்சிரமத்தில் கண்ணிவெடி கண்டெடுப்பு

(டில்லி)

புட்டபர்த்தியில் உள்ள சத்திய சாயிபாபாவின் ஆச்சிரமத்தில் வைக்கப்பட்டிருந்த நிலக் கண்ணிவெடி ஒன்று நேற்று பொலிஸாரால் செயலிழக்கச் செய்யப்பட்டது. சாயிபாபாவை கொலை செய்ய எடுத்த முயற்சி ஒநதிட்டமிட்ட சதி என்பதை மேற்படி கண்ணிவெடி ஆச்சிரமத்தில் காணப்பட்டது ஊர்ஜிதப்படுத்துவதாக தெரிவிக்கப்படுகிறது.

ஞாயிறன்று சாயிபாபாவை கொல்ல எடுத்த முயற்சியையடுத்து இவரின் சீடர்கள் சிலரும் பொலிஸாரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். இதனிடையே ஆச்சிரம நிர்வாகத்தில் ஏற்பட்ட சச்சரவே இந்த கொலை முயற்சிக்கு காரணம் என்றும் கூறப்படுகிறது.

ஞாயிறன்று இரவு சாயிபாபாவை கொல்ல நான்கு இளைஞர்கள் முயற்சித்ததும் இதன்போது இரு சாயிபாபா பக்தர்கள் பலியானதும் பின்னர் கொலைஞர்கள் நால்வரும் பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டதும் தெரிந்ததே

## பல்கலைக்கழக அனுமதி 1991/92

நீதிமன்ற தீர்ப்பின்படி, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பொறியியல், 11 கற்கை நெறிக்கு 29 மாணவர்களும், கணிய அளவீடு (Quantity Surveying) கற்கை நெறிக்கு 17 மாணவரும் மொறட்டுவபல்கலைக் கழகத்துக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர் அவர்களின் பெயர்ப்பட்டியல், தனிப்பட்ட கடிதங்கள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. யாழ். பல்கலைக்கழக பரீட்சைக் கிளையுடன் தொடர்பு கொண்டு தங்களது பல்கலைக்கழக அனுமதிக் கடிதங்களைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப் படுகின்றார்கள்

-பதிவாளர்

(சி/6797)

## தமிழ்த்தின போட்டி

யாழ். கோட்டப் பாடசாலைகளுக்குஇடையிலான தமிழ்த்தினப் போட்டி எதிர்வரும் 11ஆம், 12ஆம் திகதிகளில் யா/யாழ். இந்து மகளிர் கல்லூரியில் இடம் பெறும். கொத்தணி தேசிய தனியார் பாடசாலைகளில் இடம்பெற்ற தமிழ்த்தினப் போட்டிகளில் முதலாமிடம் பெற்ற போட்டியாளர்கள் இதில் கலந்து கொள்வார்கள்.

# பொலிசாரின் கடிதம் டி. பியிடம் ஒப்படைப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் காவலில் இருக்கும் சிங்களக் கைதிகள் சாகும்வரைக்கும் உண்ணாவிரதம் இருக்கப்போவதாக அறிவித்த கடிதம் ஜனாதிபதி டி. பி. விஜயதுங்காவிடம் நேரடியாகக் கையளிக்கப்பட்டுள்ளது.

அங்கிலிக்கன் ஆயர் வணக்கத்துக்குரிய கென்னத்பெர்னபண்டோ இக்கடிதத்தை ஜனாதிபதி திரு டி. பி. விஜயதுங்காவிடம் கையளித்ததாகவும், இக் கடிதத்தைப் பெற்றுக் கொண்ட ஜனாதிபதி கைதிகளின் உண்ணாவிரதப் போராட்டம் குறித்து கருத்துக்கூறாமல் அசிரத்தையாக இருந்ததை அவதானிக்க முடிந்ததாகவும் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# புதிய கட்சி ஆரம்பிக்கும் நோக்கம் எனக்கில்லை

[கொழும்பு]

புதிய கட்சியொன்றை தான் ஆரம்பிக்கப் போவதாக வந்த செய்திகளை திருமதி ஹேமா பிரேமதாசா மறுத்துள்ளார். இச் செய்தி முற்றிலும தவறானது என தெரிவித்த அவர் தனது கணவரின் கொள்கையை நடைமுறைப்படுத்தும் கட்சிக்கு எதிராக தான் எக்காலத்திலும் செயற்படமாட்டேன் எனவும் தெரிவித்தார். சுசரித்த மக்கள் முன்னணி என்ற பெயரில் இவர் கட்சியொன்றை ஆரம்பிக்கப் போவதாக முன்னர்செய்திகள் வெளிவந்தது தெரிந்ததே.

சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜயதுங்கா, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் தனக்கு முழு ஒத்துழைப்பு வழங்குவதாகவும் தனது கணவரின் கொள்கைப்படி நடக்கும் கட்சிக்கு தான் தொடர்ந்து ஒத்துழைப்பு வழங்க வேண்டியது தமது கடமைஎன்றும் தெரிவித்தார்.

## சமாதான

அதிக ஆர்வமாக இருப்பதையும் அவதானிக்க முடிந்ததாக கொழும்பில் இருந்து கிடைக்கும் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.

ஆனால் சமாதான சூழலை ஏற்படுத்துவது குறித்து ஜனாதிபதி டி.பி விஜயதுங்காவுடன் பேச்சுவார்த்தை நடாத்துவதில் பயன் ஏதும் ஏற்படப் போவதில்லை என்று அங்கிலிக்கன் ஆயர் கருதுவதாகவும் கொழும்புத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

## பிரேமாவின்

என்றும் அந்த வானொலி தெரிவித்தது.

இப் பிரிவின் சிரேஷ்ட பொறுப்பதிகாரியான முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் லோறன்ஸ்சும், அவருக்கு அடுத்த பதவி நிலையில் இருந்த முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் யோசப்பும் தமிழர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## பெண்

ணுவத்தினர்சரமாரியாக மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஏழாலை வடக்கில் நித்திரையில் இருந்த வசந்தினி (21) என்பவரே காயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## எறிகணை

மேற்கு பகுதிக் குடியிருப்புகளை நோக்கி பத்துக்கும் மேற்பட்ட ஆட்லறிஷெல் தாக்குதலை மேற்கொண்டனர்.

நல்லெண்ணத்தூதுக்குழு நேற்று இரவு பலாலி இராணுவ முகாமில் தங்கியிருந்த வேளையிலேயே இத்தாக்குதல் சம்பவம் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. (யோ)

## சமாதானம்

தென்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந் நல்லெண்ண தூதுக் குழுவில்;- வணக்கத்திற்குரிய கலாநிதி திரு. சொம்சை

## பல்வேறு

அனைத்து அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். இறுதியாக புனித சேவியர் குருமடத்திற்கு சென்ற இந் நல்லெண்ணத் தூதுக் குழுவினர் அங்கு சமாதானத்தை எவ்வாறு முன்னெடுத்துச்செல்லலாம் என்பது பற்றி குருத்துவமாணவர்கள், அருட்சகோதரிகள், கத்தோலிக்க குருமார்களுடன் விரிவான கலந்துரையாடல் ஒன்றை நிகழ்த்தினர்.

# கருத்தரங்கு


யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இன்று பிற்பகல் 2.30 மணியளவில், சமூக விஞ்ஞான மன்றத்தின் ஆதரவில் கருத்தரங்கு நடைபெறவுள்ளது. "வங்கிகளின் வைப்புத்திட்டங்களும், அதன் நடைமுறைகளும்" என்னும் பொருளில் திரு. ந. சிவபாலகணேசன் (முகாமையாளர் தேசிய சேமிப்பு வங்கி யாழ்.) கருத்துரை வழங்குவார்.

# மாபெரும் நாடக விழா

விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக்
கழகத்தின் ஆதரவில் உருவாகி

யாழ்நகர்
ஸ்ரீதர் திரையரங்கில்
முல்லை மாவட்டக் கலைஞர்களின்
இரண்டாவது வெற்றிப் படைப்பு
"இது எங்கள் தேசம்"

உதிர்வு:
**1992-05-24**



அமரர்

## சண்முகம் சுப்பிரமணியம்

(பிரபல தவில் வித்துவான்)

திதி: 09-06-1993

அன்பு பொழிந்து அமுதமொழி பேசி அரவணைத்து
எங்களையெல்லாம் ஆளாக்கிய அருமைத் தெய்வமே!
பிரிவு இயற்கையானாலும் வதைக்கிறது எம் இதயம்
எங்களை நினைத்து வாழ்ந்த நீங்கள் இப்போது
எங்களையே சுற்றி நிற்பீர்கள்
உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

என்றும் உங்கள் நினைவால் வாடும்
அன்பு மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள்.

தெல்லிப்பழை வீதி,
சித்தன்கேணி.

தகவல்: வி. சத்தியா

(5115)

---

## ஓராண்டு நினைவலைகள்

| வீரப்பிறப்பு: | | வீரச்சாவு: |
|---|---|---|
| 1969 |  | 1992 |
| – | | – |
| 06 | | 06 |
| – | | – |
| 23 | | 09 |

## மேஜர் கெரில்லா

[வெற்றிச்செல்வன்]

சீறும் சிங்களத்தின் தளபதிகளை - உடல்
வேறாக்கி சாயவைத்தாய் - கண்ணிவெடி வீரனே!
கெரில்லாப் படையணியின் மூதூரின் மூலவேர் நீ
கெரில்லாத் தாக்குதலின் 'கெரில்லா' ஆனவனே
மூதூர் மண்ணின் மைந்தனே
வெற்றிச் செல்வனே! தாயகத்தின் வெற்றி
வெகு தொலைவிலில்லை.
நீ சென்று ஓராண்டென்ன
ஓராயிரம் ஆண்டானாலும்
உன்னை எண்ணி வாடுகிறோம்
உனது ஆன்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

9-06-93 இன்று சக போராளிகளையும் மதிய உணவில் கலந்து கொள்ள அழைக்கின்றோம்.

லோட்டஸ் வீதி, வண்ணார்பண்ணை. - குடும்பத்தினர்

[5112]

---

பெயர்ப்பட்டியல், தனிப்பட்ட கடிதங்கள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளன. யாழ். பல்கலைக்கழக பரீட்சைக் கிளையுடன் தொடர்பு கொண்டு தங்களது பல்கலைக்கழக அனுமதிக் கடிதங்களைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப் படுகின்றார்கள்

-பதிவாளர்

(சி/6797)

கன் ஆயர் கருதுவதாகவும் கொழும்புத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

### பிரேமாவின்

என்றும் அந்த வானொலி தெரிவித்தது.

இப் பிரிவின் சிரேஷ்ட பொறுப்பதிகாரியான முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் லோறன்ஸ்சும், அவருக்கு அடுத்த பதவி நிலையில் இருந்த முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் யோசப்பும் தமிழர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

காயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

### எறிகணை

மேற்கு பகுதிக் குடியிருப்புகளை நோக்கி பத்துக்கும் மேற்பட்ட ஆட்லறிஷெல் தாக்குதலை மேற்கொண்டனர்.

நல்லெண்ணத்தூதுக்குழு நேற்று இரவு பலாலி இராணுவ முகாமில் தங்கியிருந்த வேளையிலேயே இத்தாக்குதல் சம்பவம் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. (யோ)

### சமாதானம்

தென்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந் நல்லெண்ண தூதுக் குழுவில்;- வணக்கத்திற்குரிய கலாநிதி திரு. சொம்சை உஷலசிற்றோ (தாய்லாந்து) வண. ஆண்டகை திரு. யுஆன் டையர்ஸ் பியூபிளஸ் (பிலிப்பைன்ஸ்), வண. ஆண்டகை திரு. ஏ செல்வநாயகம் (மலேசியா), வண. பிதா திரு. றினியோ கோர்டோன் சில்லோ (பிலிப்பைன்ஸ்), வண. கரோலின்ஸ்பிறிஸ் (புருணை). திரு. ஜோவில்யம் (கொழும்பு) ஆகியோருடன் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த வண. பிதாக்களான, திருவாளர்கள். ஏ.ஜே.வி. சந்திரகாந்தன், எம். இ பியுஸ், எஸ். எச் ஜெபநேசன், திரு ஜி. அருளானந்தம் ஆகியோர் இச்சந்திப்பின் போது இடம் பெற்றுள்ளனர். (30)

### பதிவு வைத்திய

தாதிகள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், துணை மருத்துவ சேவையாளர்கள் போன்றோருக்கு சம்பள உயர்வு கிடைக்கும் என அவர் மேலும் தெரிவித்தார்.

வினா அங்கு சமாதானத்தை எவ்வாறு முன்னெடுத்துச்செல்லலாம் என்பது பற்றி குருத்துவமாணவர்கள், அருட்சகோதரிகள், கத்தோலிக்க குருமார்களுடன் விரிவான கலந்துரையாடல் ஒன்றை நிகழ்த்தினர்.

திரங்கு நடைபெறவுள்ளது. ''வங்கிகளின் வைப்புத்திட்டங்களும், அதன் நடைமுறைகளும்'' என்னும் பொருளில் திரு. ந. சிவபாலகணேசன் (முகாமையாளர் தேசிய சேமிப்பு வங்கி யாழ்.) கருத்துரை வழங்குவார்.

---


## மாபெரும் நாடக விழா

விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழகத்தின் ஆதரவில் உருவாகி தமிழீழத்தில் பல அரங்குகள் கண்ட

★ **களத்தில் காத்தான்**

மற்றும் யாழ். மாவட்டத்தில் பல மேடைகள் கண்ட

★ **உணர்வுடன் எழுவோம்**

★ **தாயக மண்**

ஆகிய நாடகங்கள் அரங்கேற உள்ளன

**பிரவேசம்: இலவசம்!**

இடம்:- புனித பரியோவான் கல்லூரி
காலம்:- 09-06-93 (இன்று)
நேரம்:- இரவு 7-30 மணி

அனைவரும் அணிதிரண்டு வருக

(சி/6796) யாழ். வர்த்தக சங்கம்



யாழ்நகர்

## ஸ்ரீதர் திரையரங்கில்

முல்லை மாவட்டக் கலைஞர்களின்

இரண்டாவது வெற்றிப் படைப்பு

## "இது எங்கள் தேசம்"

தினசரி மாலை 4 மணி, 6 மணி
சனி, ஞாயிறு தினங்களில்
காலை 10. 30 மாலை 4 மணி, 6 மணி

[சி-6736]


## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள் 08-06-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 9766

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்: இல்லை.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:
24-5127, 24-5036, 42-9112, 27-8179, 28-9633, 42-3126, 28-1730, 28-6020, 26-6335, 41-6686, 27-5186, 41-9997, 27-7822, 27-8959, 28-6748, 26-3390, 26-5157.

---


## பதவி வெற்றிடம்

பதவி : வெளிக்கள உத்தியோகத்தர், தகவல் சேகரிப்பாளர்
கல்வித்தகைமை: க. பொ. த. (உயர்தர) பரீட்சையில் சித்தி
வயதெல்லை: 36 வயதுக்குட்பட்ட ஆண், பெண் இருபாலாரும்
விண்ணப்ப முடிவுத் திகதி: 15-06-1993
அனுப்ப வேண்டிய முகவரி: தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம்
மாவட்டச் செயலகம்,
கோண்டாவில்.

குறிப்பு:
1. யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்து உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
2. விண்ணப்பதாரிகள் அனைவரும் இன்றும், எதிர்வரும் 15-ம் திகதியும் காலை 9 மணிக்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழக மாவட்டச் செயலக பொன்னம்மான் கருத்தரங்கு மண்டபத்தில் நடைபெறும் நேர்முகப் பரீட்சைக்கு தவறாது சமுகமளித்தல் வேண்டும். பரீட்சார்த்திகள் அனைவரும் குறிப்பிட்ட நேரத்திற்கு நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளித்தல் வேண்டும். எந்தப் பரீட்சார்த்திக்கும் தனிப்பட்ட அழைப்புக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட மாட்டாது.

(சி-6795)


## மரண அறிவித்தல்

## திருமதி மேனகா பாலசுப்பிரமணியம்

இணுவில் மேற்கைச் சேர்ந்த திருமதி மேனகா பாலசுப்பிரமணியம் 8 - 6 - 1993 செவ்வாயன்று மாலை காலமானார் அன்னார் திரு பாலசுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், சுஜீவன், ஜெனீபன் ஆகியோரின் அருமைத் தாயாரும், காலஞ்சென்ற இரத்தினம், பஞ்சவர்ணம் ஆகியோரின் அருமை மகளும், விக்னேஸ்வரன் (சிரேஷ்ட விரிவுரையாளர், கிழக்குப் பல்கலைக் கழகம்), சண்முகேஸ்வரன் (ஆசிரியர், யூனியன் கல்லூரி. தெல்லிப்பழை), திருமதி ரேணுகா சிவகுமார், மல்லிகா ஆகியோரின் அருமைச் சகோதரியும், திருமதி பவானி விக்னேஸ்வரன் சிவகுமார் (கனடா) ஆகியோரின் மைத்துனியும், வண்ணார்பண்ணையைச் சேர்ந்த ஆறுமுகம் சிவக்கொழுந்து ஆகியோரின் மருமகளுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று புதன்கிழமை 12. 30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தாவடி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:
இ. விக்னேஸ்வரன்.
(சகோதரன்)

(5116)

---


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993-ம் ஆண்டு ஜூன் மாதம் 9-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது